**நவம்பர் - 23**

**"நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு பொறுமை (சந்தோஷமான சகிப்பு உறுதி) உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. – எபி 10.36.**

இங்கு நாம் பார்ப்பது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது மாத்திரம் இதற்குரிய பரீட்சை என்பது அல்ல. ஆனால், நம்முடைய இருதயங்களில் நம்முடைய சித்தத்தினால் (மாம்சத்தில் பூர்த்தியாகாமல் இருந்தாலும்) அந்தத் தெளிவான விசேஷித்த குணத்தை அந்தக் குறியை அடைந்தபிறகு, பொறுமையான சகிப்புத்தன்மையினாலே எல்லா சூழ்நிலைகளிலும் நிலைமைகளிலும் நாம் தேவனுடைய நீதியுள்ள சித்தத்தை, நம்முடைய இருதயங்களில் பிரமாணமாகவும் ஜீவியத்தின் சட்டமாகவும் நிர்மாணிக்க வேண்டும். அதுவரை அல்ல, அதற்குப்பிறகு நாம் ராஜ்ஜியத்திற்காகத் தகுதியுள்ள இருதயநிலையில் இருப்போம். அப்போஸ்தலனாகிய யாக்கோபு "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை (பொறுமையான சகிப்பை) உண்டாக்குகிறது" என்று சொல்லியிருக்கிறார். அதாவது உங்களுடைய பொறுமை பரீட்சைக்கு நிற்குமானால் இந்த பொறுமையான சகிப்பின் குணத்தை நடப்பிக்கும். அதற்குமாறாக, பொறுமையான சகிப்பை நாம் அடையாமறபோனால், உண்மையாகவே, நம்முடைய விசுவாசம் பரீட்சைக்கு திருப்திகரமாக நிற்கவில்லை என்றும் நாம் ராஜ்ஜியத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றும் இது உண்மையாகவே குறிக்கும்.

**- Z ’01, 117 (R 2790).**

பொறுமை என்பது வெறும் நீடிய பொறுமை என்று வேதாகமம் குறிக்கவில்லை. ஆனால் நன்மை செய்வதில் துரிதமாக முன்னேறிச்செல்லும் பாதையில் இடையூறுகளை சந்தோஷமாக சகிக்கிற அந்த விடா முயற்சியையும் நிலை நீங்காமையையும், உறுதியையும் குறிக்கிறது. தேவனுடைய சித்தத்தின்படி செய்வது என்று அப்போஸ்தலன் சொல்லுவது அந்தக் குறியை அடையும்வரை அன்பை அபிவிருத்தி செய்வதைக் குறிக்கிறதாகத் தோன்றுகிறது. ஏனென்றால், நமக்காகவுள்ள தேவனுடைய சித்தத்தின் முக்கியமான பொருளும், கற்பனையின் பொருளும், சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறப்பதும் அன்பே. அன்பின் அப்படிப்பட்ட ஒரு அன்பை நாம் அடைந்த பின்பு அந்த அன்பு தூண்டுகிறதை செய்யும்போது, வழியில் ஏற்படுகிற ஒவ்வொரு தடையையும் சந்தோஷத்துடன் சகிப்பதில் விடாமுயற்சியோடு துரிதமாக முன்னேறுவது நமக்கு வேண்டியதாயிருக்கிற ஒரு காரியம். இது முடிவில் நம்மை ஜெயங்கொண்டவர்களாக்கி இவ்விதமாக ஆபிரகாமின் சந்ததிக்கு ஆணையினால் கட்டப்பட்ட வாக்குத்தத்தத்திலுள்ள எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் சுதந்தரித்துக் கொள்ளுவதை நமக்கு நிச்சயம் பண்ணும். **- P ’33, 162.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**லூக் 8:15; 21:19; கலா 6:9; எபி 12:1; யாக் 1:3,4; 5:7,8; ரோம 2:7; 5:3,4; 8:25,35-39;15:4, 6; எபே 6:8; கொலோ 3:24; எபி 6:12,15; 1பேது 2:19-23; வெளி 1:9; 13:10.**

**கோபுர வாசிப்பு : Z ’13, 312 (R 5332).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் நான் பொறுமையுடனிருந்தேனா? எப்படி? பலன்கள் என்ன?**